Registered as a News Paper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

Y.MCA

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 28 (10 - 05 - 1992) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 82

## ஆங்கில பாடத்தில் 30 வீதமானோர் சித்தி

(கொழும்பு)

1991 டிசம்பர் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய இரண்டு லட்சம் மாணவர்களில் முப்பது சதவிகிதமானோர் ஆங்கில பாடத்தில் சித்தி அடைந்துள்ளனர். மேலும் எட்டு சதவிகிதமானோர் திறமைச் சித்தியும், 2·5 விகிதமானோர் விசேட சித்தியும் ஆங்கில பாடத்தில் பெற்றுள்ளனர் என்று கல்வி அமைச்சின் செயலாளர் எம்.டி.டி. பீரிஸ் கூறியுள்ளார். இப்போது நடைமுறையில் இருக்கும் ஆங்கில பாடத்திட்டம் 1983-84 இல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

# ஜெயலலிதா அரசு கலைக்கப்படுமா?

# இந்திய உயர்நீதிமன்றுக்கு சவால்

## ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் வருத்தம்

(சென்னை)

தமிழக சட்டப் பேரவைக்கும், உச்ச நீதி மன்றத்துக்கும் ஏற்பட்டுள்ள மோதல் குறித்து தாம் வருந்துவதாக ஜனதா தள் தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான ஜோஜ் பெர்ணாண்டஸ் கூறியிருக்கிறார்.

நேற்றுச் சென்னையில் செய்தியாளர் முன்னிலையில் பேசிய அவர் மக்கள் பிரதிநிதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 2 அதிரடிப் படையினர் பலி; ஐந்து பேர் படுகாயம்

### --அக்கரைப்பற்றில் கண்ணிவெடி

(கொழும்பு)

அக்கரைப்பற்றில் புலிகளின் நிலக்கண்ணிவெடியில் இரண்டு விசேட அதிரடிப்படையினர் கொல்லப்பட்டனர். ஐந்து பேர் படுகாயமடைந்தனர்.

நேற்று ரோந்து சென்ற பொலிஸ் வாகனம் ஒன்று புலிகளின் நிலக்கண்ணிவெடியில் சிக்கியதால் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இன்று பள்ளிக்கூடம் ஒன்றைத் திறப்பதற்கு ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அங்கு வரவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## கண்ணி வெடியில் சிக்கி இராணுவ ஜீப் சிதறியது

திருமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலில் சிறிலங்கா இராணுவ ஜீப்வண்டி ஒன்று சிக்கிச் சிதறியது.

மேற்படி தாக்குதல் பற்றித் தெரிய வருவதாவது நேற்றுக் காலை 10-35 மணியளவில் திருமலை பச்சை நூல் இராணுவ முகாமிலிருந்து பாலத்தோப்பூர் இராணுவ முகாமிற்குச் சென்ற ஜீப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளர் விவகாரத்தால் எழுந்த அரசியல் சாசன நெருக்கடி

(டில்லி)

பத்திரிகையாளர் விவகாரம் குறித்து தமிழ் நாடு மாநில அரசுக்கும் இந்திய உயர் நீதி மன்றத்திற்கும் மத்தியில் தலைதூக்கியுள்ள பிரச்சினை ஒரு அரசியல் சாசன நெருக்கடியாக மாறியுள்ளது. இந்த நெருக்கடி தொடருமானால் தமிழ் நாட்டு அரசை கலைத்துவிடுமாறு உயர் நீதி மன்றம் இந்திய ஜனாதிபதிக்கு பரிந்துரை வழங்கலாமென தெரிய வருகிறது இந்தக் கடும் முடிவு எடுப்பதற்கு இந்திய அரசியல் யாப்பில் வழிவகை உண்டென பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

தமிழக சட்டசபை பத்திரிகையாளரைக் கைது செய்வதற்கென பிறப்பித்த பிடிவாரண்டை இடைநிறுத்தி வைக்குமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை தெரிந்ததே. ஆனால், தமிழக சட்டசபை சபாநாயகர் உச்ச நீதி மன்றம் தடையுத்தரவு விதித்திருப்பினும் தமிழகசட்டசபையின் பிடிவாரண்ட் செல்லுபடியாகும் எனத் தெரிவித்திருப்பதைத் தொடர்ந்தே இவ் அரசியற்சாசன நெருக்கடிஎழுந்துள்ளது.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 143-வது பிரிவின் கீழ் அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு அமைய ஒரு அரசை நடத்த முடியாத நிலை உருவாகியுள்ளதாக உச்ச நீதி மன்றம் குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரைக்கலாம். அப்படி உச்ச நீதி மன்றம் தெரிவித்தால் சட்டப் பேரவையைக் கலைத்து விட்டுக் குடியரசுத் தலைவர் ஆட்சியைப் பிரகடனப் படுத்துவது ஒன்றே குடியரசுத் தலைவருக்கு உள்ள ஒரே வழியாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இன்று எழுந்துள்ள நெருக்கடி பற்றி கருத்து வெளியிட்டுள்ள முன்னாள் தமிழக சட்டமன்ற சபாநாயகர் பி. எஸ். பாண்டியன் தற்போதைய சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா நிலைமையைச் சீர் செய்யாமல், மாறாக இயல்பு நிலைக்குத் திரும்ப முடியாத அளவுக்கு மோதல் நிலைக்குப் பிரச்சினையைத் தள்ளி விட்டுவிட்டார் என்று கருத்து வெளியிட்டுள்ளார்.

## 3 மாணவிகள் உட்பட 4 பெண்கள் களுவாஞ்சிக்குடியில் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவாஞ்சிக்குடிப் பகுதியைச்சுற்றிவளைத்தசிறிலங்கா பொலிஸார் மூன்று மாணவிகள் உட்பட நான்கு பெண்களைக்கைதுசெய்து பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றுள்ளனர்.

கடந்த ஐந்தாம் திகதி காலை களுவாஞ்சிக்குடி எட்டாம் வட்டாரத்தைச் சுற்றி வளைத்த பொலிஸார் பாடசாலை மாணவிகளான புவனேந்திரராசா யசோதினி (வயது 19), புவனேந்திரராசா தேவித்திரி (வயது 17) சகோதரிகளையும், பழுகாமத்

## குண்டுத் தாக்குதல்

## உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை தமிழக சபாநாயகர் நிராகரிப்பு

(சென்னை)

இரண்டு பத்திரிகையாளர்களைக் கைது செய்யக் கூடாது என்று உச்ச நீதி மன்றம் தடை செய்த போதிலும் அவர்களைக் கைது செய்யக் கூறும் தீர்மானமும், தாம் விடுத்த ஆணைகளும் இன்றும் செல்லுபடியாகும் என்று சேடப்பட்டி முத்தையா குறிப்பிட்டிருக்கிறார்.

சென்னையில் நேற்றுச்

கட்டளைகளையும் பேரவைத் தலைவரான தானோ, உரிமைக் குழுவோ அல்லது பேர

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இந்திய ஜனாதிபதியிடம்

## குண்டுத் தாக்குதல்
## நடத்தி விட்டு வீரச்சாவு

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகள் இயக்க உதவியாளர் ஒருவரை சிறிலங்கா உளவுப் படையினரும் பொலிசாரும், இராணுவத்தினரும் இணைந்து சுற்றி வளைத்து பிடிக்க முற்பட்ட போது அவர் இவர்கள் மீது குண்டுத்தாக்குதலை மேற்கொண்ட பின் சயனைட் அருந்தி வீரச்சாவடைந்தார்.

மேற்படி சம்பவம் பற்றித் தெரியவருவதாவது கடந்த நாலாம் திகதி இயக்க வேலையாக மட்டக்களப்பு இருதயபுரத்திற்குச் சென்ற உதவியாளரை சிறிலங்கா இராணுவ உளவுப் படையினர் பொலிசாரின் உதவியுடன் பிடிக்க முற்பட்டனர். இதன் போது அவர் கைக் குண்டு ஒன்றை வீசினார் இதனைத் தொடர்ந்து அவர் ஓர் வீட்டுக்குள் நுளைந்த

[4ஆம் பக்கம் பார்க்க]

சகோதரிகளையும், பழுகாமத்தைச் சேர்ந்த கணபதிப் பிள்ளை டெஸ்மதி (வயது 25) ஆகியோரையும் நல்லதம்பி நாகலட்சுமி (வயது 40) என்ற குடும்பப் பெண்ணையுமே கைதுசெய்து பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுசென்றுள்ளனர்.

## கடலுக்கு சென்ற மீனவர்
## திரும்பி வரவில்லை

(குருநகர்)

குருநகரில் இருந்து வல்வெட்டித்துறைக்கு கடல் மார்க்கமாக நேற்று முன் தினம் (8-5-92) சென்ற மீனவர் திரும்பி வரவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.

கடலில் பாய்ந்து நின்ற கம்புனை எடுத்துவரச் சென்றிருந்த குருநகர் மவுண்கார்மல் வீதியைச் சேர்ந்த அந்தோனி செபஸ்தியாம்பிள்ளை (சின்னராசா வயது 43) என்பவரே

(4ஆம் பக்கம் பார்க்க)

# குடியிருப்புகள் மீது
# வவுனியாவில் குண்டு வீச்சு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் மக்கள் குடியிருப்புகளை நோக்கி குண்டு வீச்சுத் தாக்குதல்களையும் கலிபர் தாக்குதல்களையும் மேற்கொண்டன.

நேற்றுக் காலை 7.25 மணியளவில் வவுனியா தவசியன் குளம் பகுதியை வட்டமிட்ட இரண்டு குண்டுவீச்சு விமானங்களும் உலங்கு வானூர்தி ஒன்றுமே இத்தாக்குதல்களில் ஈடுபட்டன.

மக்கள் குடியிருப்புகளை நோக்கி உலங்கு வானூர்தி கலிபர் தாக்குதலை மேற்கொண்டிருந்த வேளை இரண்டு குண்டுவீச்சு விமானங்களும் அடுத்தடுத்து நான்கு குண்டுகளை வீசின.

இக் குண்டுகள் வீழ்ந்து வெடித்ததில் இரண்டு வீடுகள் சேதமடைந்ததுடன் சில கால் நடைகளும் பலியாகியுள்ளன.

# கொக்குத்தொடுவாயில்
# தீவிரசிங்களக் குடியேற்றம்

(மணலாறு)

கொக்குத்தொடுவாய் தமிழ்க் கிராமத்தில் சிறிலங்கா அரசு திட்டமிட்டுத் துரித சிங்களக் குடியேற்றத்தை மேற்கொண்டு வருகின்றது.

மணலாறு மாவட்டத்தில் உள்ள கொக்குத் தொடுவாய் எனும் இடத்தில் உள்ளகரையோரப்பகுதிகளிலேயே இத்துரிதகுடியேற்றம் மேற்கொள்ளப்படுகிறது.

கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் இப்பகுதிகளில் பல புதிய கிராமங்களை உருவாக்கி அங்கு இருநூறுக்கும் மேற்பட்ட சிங்கள மீனவ குடும்பங்கள் இவ்வாறு குடியேற்றப்பட்டுள்ளனர்.

நாட்டை வளம்படுத்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

செய்த போதிலும் அவர்களைக் கைது செய்யத் தான் பிறப்பித்த உத்தரவு இனிமேலும் செல்லுபடியாகும் என்று தமிழக சட்டப் பேரவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையா கூறியிருக்கிறார்.

கோவை மாலை முரசு ஆசிரியரும், இலஸ்ரேட்டட் வீக்லி முன்னாள் பத்திரிகையாளரும், முரசொலி ஆசிரியர் செல்வமும் பேரவை உரிமை மீறலுக்காகக் கைது செய்யப்படவேண்டும் என்று மேற்கொள்ளப்பட்டகிறார்.

சென்னையில் நேற்றுச் சேடப்பட்டிமுத்தையாவிடுத்த அறிக்கை ஒன்றில், அரசியல் யாப்பின் 212, 208ஆம் பிரிவுகளின்படி இன்றுள்ள தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை வெளியமைப்புகளின் எவ்வித தலையீடுகளுக்கும் அப்பாற்பட்டு இயங்கும் தனித்தன்மையையும், மேலாண்மையையும் வெற்றிருக்கிறது என்று குறிப்பிட்டார்.

இதற்கு ஏற்றாற் போல் எந்த நீதிமன்றம் அனுப்பும்

## பத்திரிகை எரிப்பது
## அம்மாவின் புனிதப் போர்
### அ. தி. மு. க. மாவட்டச் செயலாளர்

(சென்னை)

"இது அம்மா நடத்தும் புனிதப்போர் எதிர்த்து நடம்பவர்களுக்கு நாங்கள் புகட்டுப் பாடம் இது" என்று நக்கீரன் பத்திரிகையின் தீவைப்பில் ஈடுபட்ட அ. இ அ தி. மு. க. வின் மாவட்டச் செயலாளர் ஒருவர் கூறியுள்ளார்.

நக்கீரன் வார இதழ் தமிழகத்தின் பல பாகங்களிலும் அண்மையில் தீக்கிரையாக்கப் பட்டது தெரிந்ததே.

நக்கீரன் வார இதழிலேயே இந்திரா காங்கிரஸ் கட்சியின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### இந்திய ஜனாதிபதியிடம்
## பத்திரிகை சுதந்திரத்தை
## காப்பாற்ற வேண்டுகோள்

(சென்னை)

தமிழகத்தில் பத்திரிகைச் சுதந்திரத்தைக் கட்டிக் காக்க குடியரசுத் தலைவர் தலையிட வேண்டுமென்று சென்னையில் இயங்கும் நான்கு செய்தியாளர் சங்கங்களின் கூட்டமைப்புகேட்டிருக்கிறது.

பத்திரிகைச் சுதந்திரம் மட்டுமல்லாது, பத்திரிகையாளரின் உயிருக்கே ஆபத்தான நிலைமை இருப்பதாக குடியரசுத் தலைவருக்கு அனுப்பிய மகஜரில் அந்தக் கூட்டமைப்பு கருத்துத் தெரிவித்திருக்கிறது.

## பத்திரிகையாளர்கள்
## தலைமறைவாகினர்

(சென்னை)

சட்ட மன்ற உரிமைகளை மீறியவர்கள் என்று சபாநாயகர் சேடப்பட்டி முத்தையாவால் குறிப்பிடப்பட்ட மூவரில் முரசொலி ஆசிரியர் செல்வம், கோவை மாலை முரசு ஆசிரியர் சுந்தர் இருவரும் இப்போது தங்கியிருக்கும் இடம் எதுவெனத்தெரியவில்லை எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலஸ்ரேட்டட் வீக்லி முன்னாள் செய்தியாவரான கே. பி. சுனில் சென்னையில் சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருக்கிறார் எனத் தெரிவிக்கப் படுகிறது. இதுவரைஇவரைக் கைது செய்ய எந்த முயற்சியும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லைஇதற்கு உச்சநீதி மன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவே காரணமெனத் தோன்றுகிறது.

### புலிகள் மீது தடை கூடாது;
# பாட்டாளி மக்கள் கட்சிக் குழு
# நரசிம்மராவைச் சந்திக்கும்

(சென்னை)

விடுதலைப் புலிகளைத் தடைசெய்யக் கூடாதெனக் கோருவதற்காக பாட்டாளி மக்கள் கட்சியின் தூதுக் குழுவொன்று பிரதமர் பி. வி. நரசிம்மராவைச் சந்திக்கவிருக்கின்றது என தமிழகத்திலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் ராஜீவ் காந்தியின் பாதையிலிருந்து விலகித் தனது சொந்தப் பாதையில் செல்வதற்கு பிரதமர் நரசிம்மராவ் இப் பிரச்சினையைப் பயன்படுத்தி வருவதாகவும் தமிழகத்தில் வதந்திகள் பரவியுள்ளன. விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் விவகாரத்தில் மத்திய அரசு தாமதம் காட்டிவருவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## புலிகளை வெளியேற்ற
## மூப்பனார் வேண்டுகோள்

(சென்னை)

விடுதலைப் புலிகள் இந்திய மண்ணிலிருந்து வெளியேற்றப் படவேண்டுமென்று காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஜி கே. மூப்பனார் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் கடலூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், விடுதலைப் புலிகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தூதரகம் முன்
## நீண்ட வரிசை

[கொழும்பு]

கொழும்பில் இந்திய உயர் ஸ்தானிகராலயத்திற்கு முன் நீண்டவரிசையில் மக்கள் நிற்பதாகத்தெரிவிக்கப்படுகிறது. விஸாபெறுவதற்காகவே இந்தக் கியூ நின்றது. இந்த வரிசையில் இடம்பிடித்து 'இடத்தை' விற்கவே பலர் கியூவில் இடம் பிடிக்கிறார்கள். முதல்நாள் இரவிலிருந்தே 'கியூ' ஆரம்பித்துவிடுகிறது. இடத்துக்குப் பேரம்பேசி எவர் கூடப் பணம் தருகிறார்களோ அவருக்குக் கியூவில் இடம் விற்கப்படுகிறது.

இந்திய உயர் ஸ்தானிகரா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### புலமைப் பரிசில்

அரசாங்கத்தால் 26-4-1992 (ஞாயிறு) நடத்தப்பட்ட பரீட்சை வினாத்தாள்கள் விடைகளுடன் விற்பனையாகின்றன. பாடசாலைகளுக்கும், தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் விசேட சழிவுண்டு. பரீட்சைப் பகுதி, Bond கல்வி நிறுவனம், யாழ்ப்பாணம். (சி/ 4381)

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் பெற்றுக்கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி/ 4382)

### சங்கீதம் வினாவிடை

சங்கீதம் வினாவிடை தயாரிப்பு ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்த சர்மா 6 ஆம், 7 ஆம், 8 ஆம், 9 ஆம் ஆண்டுகளிலும் வட இலங்கைச் சங்கீத சபையின் 2 ஆம் தரம் பரீட்சைகளுக்கான பாடத்திட்டங்களை உள்ளடக்கியது. நடுவுத் துருத்தி நல்லூர்ச் சந்தை வெளியீடு: கிடைக்குமிடம் ஸ்ரீ காந்தா புத்தகசாலை, 330, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (6250)

### விற்பனைக்கு

இரண்டு மாதம் நிரம்பிய நல்ல இன அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு பூச்சிகள் நீக்கப்பட்டது. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி சரவணாஸ் ஹோட்டல், ஸ்டேசன் முன்பாக பிறவுண் றோட், கொக்குவில் கிழக்கு. (2561)

## முச்சக்கர வண்டி அன்பளிப்பு

(குருநகர்)

பிறவியிலேயே ஊனமடைந்த இரு இளைஞர்களுக்கு கடந்த (6-5-92) புதன்கிழமை யாழ். பிரதேசச் செயலகத்தில் வைத்து முச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

கடந்த 1989 ஆம் ஆண்டு சமூக சேவைப் பகுதிக்கு ஊனமுற்றவர்கள் சார்பாக விண்ணப்பித்து இருந்ததைத் தொடர்ந்து சமூக சேவை உத்தியோகத்தர் செல்வி பீ. யோகநாதர் மேற்படி இருவரையும் சிபார்சு செய்திருந்தார்.

குருநகர் மத்திய கிழக்கு வீதியைச் சேர்ந்த அன்ரனி

## அரச பாடசாலைகளில் மதபோதகர்கள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

அரச பாடசாலைகளில் மதபோதகர்களுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது. அரச பாடசாலைகளில் சமயபாடம் கற்பிக்க மதபோதகர்களை நியமனம் செய்யும் திட்டத்தின் கீழ், வேலணைக்கல்விக் கோட்டத்தில் ஐந்து பாடசாலைகள் தெரிவு செய்து, அதற்கான ஐந்து மதபோதகர்களின் பெயர்களும் வேலணைக் கோட்டப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் சி.புலேந்திரனால் மத்திய கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சரம்பன் சிறிய புஸ்பம், வேலணை சைவப் பிரகாச வித்தியாலயம், புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தியாலயம், மண்கும்பான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகியவையே இத்திட்டத்திற்கமைய சிபார்சு செய்யப்பட்ட பாடசாலைகளாகும்.

இந்த நியமனம் குறித்து முதன்மை வழங்கும் படியும் மறுதபாலில் விபரங்களை அனுப்பும்படியும் அமைச்சு வலியுறுத்தியதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை; ஏனைய ஐந்து கோட்டங்களையும் மத்திய அமைச்சு இவ்வாறு கோரியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## லொறிக் கொள்வனவு

எமது சங்கத்திற்கு நல்ல தரத்திலுள்ள ஒரு லொறி தேவைப்படுகின்றது. விற்பனை செய்யவிரும்புவோர் முழு விபரங்களுடன் நேரடியாகவோ எழுத்துமூலமோ கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்
பச்சிலைப்பள்ளி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்
பளை,

(2559)

## புற்றுநோய் பற்றிய அறிவித்தல்

அண்மைக் காலங்களில் எமது பகுதிகளில் பலர் இந்நோயினால் பாதிப்படைந்துள்ளனர். தற்போதைய புற்றுநோய் பற்றிய அறிவை நாம் பயன்படுத்தினால் 70% மான புற்றுநோயைத் தடுக்கவும், பூரண சுகமாக்கவும் முடியும்.

### புற்றுநோயின் ஆரம்ப அறிகுறிகள்

1) ஆறாத புண் - குறிப்பாக வாய்,தொண்டைப்பகுதி.
2) உடல் துவாரங்களிலிருந்து அசாதாரண குருதி ஓட்டம் / நீர்க்கசிவு.
3) மார்பகத்தில் / உடலில் அசாதாரண கட்டி உண்டாகுதல்.
4) தொடர்ச்சியான அஜீரணம் அல்லது உணவு விழுங்க முடியாதிருத்தல்.
5) உடலில் உள்ள மறு அல்லது மச்சத்தில் மாற்றம் ஏற்படுதல்.
6) தொடர்ச்சியான இருமல் அல்லது தொண்டை கரகரப்பு.
7) மலசலம் கழிக்கும் பழக்கத்தில் ஒரு மாற்றம் ஏற்படுதல்.
8) காரணம் கண்டுகொள்ள முடியாத தேக மெலிவு.

இவை உங்களுக்கு இருப்பின் வைத்திய ஆலோசனை பெறுதல் அவசியம்.

வடமாகாண புற்றுநோய்த் தடுப்புச் சங்கம்
இல. 107, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

05-05-1992
(சி/4384)

## அவசரகால பிரமாண வெளியீடு இடைப்பதில்லை

(கொழும்பு)

அரசாங்க வர்த்தமானி 8 ஆகஸ்ட், 1989 இல:569/19 இல் பத்தொன்பது அவசரகாலப் பிரமாணங்கள் வெளியாகியிருந்தன. ஆனால் இந்த வர்த்தமானி கிடைப்பதில்லை. கடந்த இரண்டரை வருடங்களாக அவசரகாலப் பிரமாணங்கள் வெளியாகியுள்ள போதிலும் அவை தொடர்பான வெளியீடுகள் எமக்குக் கிடைப்பதில்லை என்று ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில்,

சாதாரண பாராளுமன்ற நடைமுறைகளைப் பின்பற்றாமல் பொதுஜன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவசரகாலப் பிரமாணங்கள் நிறைவேற்றப்படுகின்றன. இந்தப் பிரமாணங்கள் வழக்கறிஞர்களுக்குக் கூடக் கிடைப்பதில்லை இந்நிலையில் அவை சட்டரீதியாகச் செல்லுபடியானதா என்ற கேள்வியும் எழுகிறது.

26 ஜூன் 1989க்குப் பிறகு அரசு வெளியிட்ட அவசரகாலப் பிரமாணங்களை நாட்டிலுள்ள வழக்கறிஞர்கள், அரச திணைக்களங்கள், நீதிமன்றங்களுக்கு கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்றும்,

அவசரகாலப் பிரகடனம் தொடர்பான அனைத்துப் பிரமாணங்கள், விதிகள், அதிகாரங்கள் ஆகியன தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளிப்படுத்தப்படவேண்டும் என்றும் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கம் அரசைக் கோரியுள்ளது.

## பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் சி. சிவசங்கர்

முல்லைத்தீவு கணுக்கேணியைச் சேர்ந்த சிவகுருநாதன் - இதயராதா தம்பதிகளின் செல்வப்புதல்வன் சிவசங்கர், தனது 2-வது பிறந்த தினத்தை 10-5-1992 அன்று கணுக்கேணியில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பம்மா, றதன் மாமா, ராஜா சித்தப்பா, சித்தப்பாமார் மாமிமார் (கனடா) செல்வன் அப்பா குடும்பத்தினர் ரெத்தி அப்பா குடும்பத்தினர், உருத்தி அப்பா மற்றும் மாமாமார், அன்ரிமார், அத்தைமார் ஆகியோர் இத்திருநாளில் பல்கலையும் பெற்று சீருடனும் சிறப்புடனும் சுற்றத்தாருடன் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

— தகவல்
றதன் மாமா.

(2554)

நாவாந்துறை
சென்மேரிஸ் சனசமூக நிலையம்

## தடைசெய்யப்பட்ட மருந்து யாழ். நகரில் விற்பனை

(யாழ்ப்பாணம்)

ஐரோப்பிய நாடுகளில் ஆயிரக்கணக்கானவர்களின் சாவுக்குக் காரணமாயிருந்த வலி நிவாரண மருந்தான புட்டோசோலிடின் (Butazolidin) யாழ். நகரில் சில பார்மஸிகளில் விற்பனையாவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது உணவு மற்றும் மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரி ரி. மகாதேவன் யாழ். நகரில் சில பார்மஸிகளிலிருந்து இந்த மருந்து வில்லைகளைக் கைப்பற்றியுள்ளார்.

சுவிட்சர்லாந்து சிபா-கெய்கி நிறுவனம் தயாரிக்கும் புட்டோசோலிடின் என்றழைக்கப்படும் பினைல்புட்டாசோன் சர்வதேச சுகாதார நடவடிக்கைக் குழுவின் வேண்டுகோளின் பேரில் விற்பனையிலிருந்து திரும்பப் பெறப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மருந்து உயிருக்கே ஆபத்தான லுகேமியா (இரத்தத்தில் வெள்ளையணுக்களின் எண்ணிக்கை பெருகுதல்,) குடலில் இரத்தக் கசிவு, குடல் புண் போன்ற பின்விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது.

இந்த மருந்து பற்றி எச்சரிக்கையாய் இருக்கும்படி யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அதிகாரிகள் பொது மக்களைக் கேட்டுள்ளனர். இந்த மருந்து விற்பனை இலங்கையில் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## கூட்டுறவு ஊழியருக்கு மாதாந்தம் ரூ.2000 சம்பளம்

கூட்டுறவு சங்கங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு ஆகக்குறைந்த சம்பளமாக 2000 ரூபா வழங்கப்பட உள்ளதாக உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாராய்ச்சி அண்மையில் நடைபெற்ற திருமலை கூட்டுறவு சம்மேளன மாநாட்டில் தெரிவித்தார்.

கூட்டுறவுச் சங்கங்களில் இனிமேல் நியமனங்கள் வழங்கப்படும்போது ஊழியர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு 2000/- வழங்கப்படும் என்றவிதி கடைப்பிடிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

## மலையக மக்களின் பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை

(ஹட்டன்)

மலையக மக்களின் பிரச்சினைகள் யாவும் அரசியல் பிரச்சினைகளாகவும் தேசியப் பிரச்சினைகளாகவுமே உள்ளன. அடிப்படை ரீதியிலான இப்பிரச்சினைகள் தீர்க்கப்படாதவரை இந்த மக்கள் தேசிய நீரோட்டத்தில் கலந்து வாழ முடியாது என மலையக மக்கள் முன்னணி நடாத்திய மேதின கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மலையக மக்கள் முன்னணி உபசெயலாளர் கே. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் மலையக மக்கள் இந்த நாட்டில் வாழும் இதர மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கும் தேசிய அந்தஸ்துக்கும் சரி நிகராக உயர்த்தப்பட வேண்டும் அவர்களுக்கென காணி வழங்கப்பட வேண்டும்.

மேலும் மலையக மக்கள் லயன் வாழ்க்கையை அவமானமாக வே கருதுகின்றனர் இந்த லயன் வாழ்க்கையை விட சொந்தக் காணியில் மண் குடிசையில் வாழ்வதையே தேசிய கௌரவமாகவும் கருதுகிறார்கள் எனவும் குறிப்பிட்டார்.

### நாளை வரும்

யாழ். மாவட்டத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களுடன் மேக்ஸ் 'குமாரி' கப்பல் நாளை திங்கட்கிழமை பருத்தித்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்கப்பலில் வருகின்ற பொருள்கள் அடங்கிய பட்டியல் யாழ். செயலகத்திற்கு இன்னும் வந்து சேரவில்லை என யாழ் அரசஅதிபர் தெரிவித்துள்ளார். (பா)

## நினைவு கூருகின்றோம்...

1992-05-10

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் மன்னார் காவல்

தார்.

குருநகர் மத்திய கிழக்கு வீதியைச் சேர்ந்த அன்ரனி ஜெறாட் (தேவராசா) அரியாலை கனகரெத்தினம் வீதியைச் சேர்ந்த சிவபாக்கியம் சிவகுமார் ஆகியோருக்கு யாழ். பிரதேசச் செயலரும், உதவி அரச அதிபருமான திரு க. குணராஜா (செங்கை ஆழியான்) முச்சக்கர வண்டிகளை கையளித்தார். (21)

## கண்டெடுக்கப் பட்டுள்ளது

கிளிநொச்சி மாவட்டத்தில் முரசுமோட்டை வீதியில் 'யமகா' மோட்டார்-சைக்கிள் திறப்புக் கோர்வை ஒன்று தேசியத் தலைவரின் படத்துடன், நா.சண்முகநாதன், வைரவர் கோவிலடி ஒழுங்கை, சுன்னாகம்கிழக்கு, சுன்னாகத்தைச் சேர்ந்தவரால் கண்டெடுக்கப்பட்டு விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டச் செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே, உரியவர்கள் அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

O/L 92

மாதாந்த பயிற்சிப் பரீட்சைகளுடன்

பிரிவு II

★ Day Classes

★ Evening Classes

ஆரம்பம்

09. 05. 92

BOND

INSTITUTES

யாழ்ப்பாணம்

(4380)

05-05-1992

(சி/4384)

யாழ்ப்பாணம்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர் செல்வி

### குமுதினி சண்முகசாமி

தோற்றம் 21-07-1967

மறைவு 10-04-1992

10-04-1992 அன்று எம்மைப் பிரிந்து சென்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் [ 10-05-92 ] இன்று பகல் 12 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் இதில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்கு வேண்டுவதுடன் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

தந்தை, தாய், சகோதரிகள்,
மாமாமார், மாமிமார்,
சித்தப்பாமார், அன்ரிமார்,
மச்சாள்மார், உற்றார், உறவினர்.

புகையிரதநிலையவீதி,
மல்லாகம்.

(2553)

சென்மேரிஸ் சனசமூக நிலையம்

பாலர் கல்வி நிதிக்காக

சாந்தன் இசைக்குழுவினரின்

## போர்க்கால இராகங்கள்

விடுதலைப்புலிகள்

கலை பண்பாட்டுக்கழகத்தினரின்

## சந்தனக்காடு நாடகம்

10.5 92 ஞாயிறு பி. ப. 6.00 மணிக்கு

நாவாந்துறை முத்தமிழ் மன்ற அரங்கு

அன்பளிப்பு ரூபா 10/-

(சி-4392)

## தேவை

பின்வரும் கைத்தொழில்களில் அனுபவம் உள்ள துறைசார் வல்லுனர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. கண்ணாடி உற்பத்தித் தொழில்
2. தும்பு (பல்வேறு கைவினைப் பொருள்கள் தயாரிக்கத் தெரிந்தவர்கள்.)
3. நெசவுத் தொழில்
4. இரும்புத் தொழில்
5. காகித உற்பத்தித் தொழில்
6. தையல் (குறிப்பாக ஆண்களுக்கான ஆடைகள் வெட்டுவதில் அனுபவம் உள்ளவர்கள்)
7. தோல் பதனிடுதல்
8. மட்பாண்டம் வனைதல்

மேற்படி துறைகளில் குறைந்த பட்சம் ஐந்து வருடம் முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 20-05-92

விளம்பர இலக்கம் 155
இல. 31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4389)

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் மன்னார் காவல் நிலையத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

**சபேசன்** (சோமசுந்தரம் சிறிக்குமார் - கொக்குவில்)

1986ஆம் ஆண்டு மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினர் முற்றுகையிட்டு மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**கிங்ஸ்லி/சவுரி** [இராசதுரை - முருங்கன், மன்னார்)

**சகாயம் கோபி** (சந்தியோ - முருங்கன், மன்னார்)

அளவெட்டியில் பயிற்சிமுகாமில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிகுண்டு விபத்தில் எம்மைப்பிரிந்த

**பி. புனிதவதி** (மலையகம்)

1988ஆம் ஆண்டு இக்கத்தில் இந்தியப்படையினருடனான மோதலின்போது சயனைட்உட்கொண்டு வீரச்சாவெய்திய

**கப்டன் ரவாஸ்** (செ. ஈஸ்வரஜீவா - புத்தூர்கிழக்கு)

இதே மோதலின்போது விழுப்புண் அடைந்த நிலையில் தன்னைத்தானே சுட்டு வீரச்சாவெய்திய

**லெப். வெங்கடேஸ்** (சண்முகசுந்தரம் ஜீவகரன் - இன்பருட்டி, அல்வாய்)

வவுனியாவிலிருந்து திருக்கோணமலை நோக்கிச்சென்ற சிற்றூர்தி ஒன்றின் மீது கெப்பிட்டி கொல்லாவைப் பகுதியில் வைத்து கறுப்புச்சட்டைக்காரர்கள் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட பெண்குழந்தை மற்றும் இளம் பெண்

1989ஆம் ஆண்டு யாழ். லைடன் சந்தியில் தேசவிரோத சக்திகளினால் கொலை செய்யப்பட்ட

**சபா/திலீபன்** (கருப்பையா சந்திரன் - 234/2, செபஸ்ரியன் ஒழுங்கை, ஒட்டுமடம், யாழ்.]

யாழ்ப்பாணத்தில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ். பரியோவான் கல்லூரிமாணவன்

1991ஆம் ஆண்டு அம்பாறை/தம்பிலுவில், களப்பு பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலின் போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**பவான்** (மார்க்கண்டு ராஜா - தம்பிலுவில், அம்பாறை)

**ஆனந்** (நாகராஜா நந்தகுமார்-தம்பிலுவில். அம்பாறை)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட களுவங்கேணி - 01 ஐச் சேர்ந்த தமிழ்க் கடற்றொழிலாளி

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்

விடுதலைப் புலிகள்

மக்கள் முன்னணி

(சி/8390)

## சிந்தனைக்கு

இவ்வுலகம், உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் சொந்தம் என்பதே, உன்னதச் செயல்கள் நமக்கு அறிவுறுத்தும் உண்மை.

—ரால்ப் வால்டோ எமெர்ஸன்

ஈழநாதம்

61, ஐகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 10-05-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 023-2339 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 63

# தமிழக முதல்வரின் இலக்கு எது?

விடுதலைப்புலிகளைத் தடை செய்ய வேண்டும் என்பதில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா மிகத்தீவிரமாகவுள்ளார். இதேபோன்றே தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தியும் விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டும் அல்லது மத்திய அரசிற்கெதிராகப் போராட்டம் நடத்துவோம் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, விடுதலைப்புலிகளைத் தடை செய்வது குறித்து தீவிரமாகப் பரிசீலித்துவரும் இந்திய மத்திய அரசாங்கம், விடுதலைப்புலிகளைத் தடை செய்வதனால், தென்னாசியப் பிராந்தியத்தில் தனக்கு ஏற்படும் பின்னடைவுகளை விட இந்தியாவிற்குள்ளேயே ஏற்படப்போகும் நெருக்கடி பற்றியே ஆழமாக யோசிப்பதாகத் தெரிகின்றது. விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தடை செய்வதால் முதலமைச்சர் ஜெயலலிதாவின் அரசிற்கு உயர்வான அதிகாரங்கள் கிடைக்கும் என்று அரசியல்வாதிகளும், அரசு அதிகாரிகளும் நம்புகின்றார்கள். இதனைக் கொண்டு ஜெயலலிதா அரசாங்கம் தனது அரசியல் விரோதிகளுக்கு எதிராகவும் அரசாங்கத்தைக் கண்டிப்பவர்களுக்கு எதிராகவும் பயங்கரவாத ஒழிப்புச்சட்டத்தைப் பயன்படுத்தலாம் என்ற அச்சம் ஏற்கனவே இருந்து வருகின்றது.

இந்திய அரசியல்வாதிகளினதும், அதிகாரிகளினதும் அச்சம் சரியானதே. செல்வி ஜெயலலிதாவும், அந்த அதிகாரத்தைப் பெறும் பொருட்டே விடுதலைப்புலிகளின் தடை விவகாரத்தில் தீவிர அக்கறையாகவுள்ளார். இல்லாவிட்டால், ராஜீவ்காந்தியின் மாநிலமான உத்தரப் பிரதேசத்திலோ, அன்றி ஹிந்தி பேசும் ஏனைய மாநிலங்களிலோ விடுதலைப்புலிகளைத் தடை செய்ய வேண்டும் என்ற கோசமும், போராட்டமும் தீவிரமாகவோ அன்றிச் சற்றேனும் இல்லாத வேளையில் செல்வி ஜெயலலிதா மட்டும் இவ்விவகாரத்தில் ஏன் தீவிரமாக இருக்கவேண்டும்?

செல்வி ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்பை ஏற்றதில் இருந்து தனது அரசியல் எதிரிகளைப் பழிவாங்குவதிலேயே தீவிர கவனமாகவுள்ளார். இதில் குறிப்பாக திராவிட இயக்கங்களைப் பலவீனப்படுத்தி சிதைத்துவிடுவதில் அவரது கவனம் அதிகமாகும்.

புலிகளின் ஆதரவாளர்கள் என்ற ரீதியில் திராவிட இயக்கங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்வதே ஜெயலலிதாவின் திட்டமாகும். அத்தோடு, தமக்கு எதிராகச் செயற்படும் பத்திரிகைகளையும் நசுக்கிவிடுவது நோக்கமாகும். இவற்றை வலியுறுத்துமாப்போலவே கடந்தகால ஜெயலலிதாவின் நடவடிக்கைகள் அமைந்தும் உள்ளன.

செல்வி ஜெயலலிதா ஆட்சிக்கு வந்ததும் பஞ்சாப், காஷ்மீர் போன்ற தீவிரவாதச் சம்பவங்கள் இடம்பெறும் மாநிலங்களுக்கு என ஆக்கப்பட்ட 'தடா' சட்டத்தை-பயங்கரவாதம் மற்றும் குற்றச்செயல் தடுப்[illegible]

# சட்டத்தையும் நீதி நிர்வாகத்தையும் ஒழுங்கமைத்து வருகிறோம்

## சர்வதேச மன்னிப்புச் சபைக்கு விடுதலைப் புலிகள் விளக்கம்

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பகுதிகளில் மனித உரிமைகள் மீறப்படுவதாக குற்றம்சாட்டி சர்வதேச மன்னிப்பு சபையும் ஐ. நா. மனித உரிமைகள் நிறுவனமும் விடுத்த அறிக்கைகளுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் பதிலளித்துள்ளது. விடுதலைப் புலிகளின் சர்வதேச தலைமையகம் விடுத்துள்ள பதிலறிக்கையில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி, நீதி பரிபாலனத்தை செம்மையான முறையில் நடைமுறைப்படுத்த புலிகள் இயக்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் விபரிக்கப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகளின் அறிக்கையை இங்கு தருகின்றோம்.

[illegible] றிலங்[illegible] சாங்கத் [illegible]ப்ப[illegible] கீழுள்ள [illegible] பிட்ட [illegible]ற்கு விடு[illegible]லை புலிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பிர[illegible]தசங்களிலு[illegible] மனித உரிமைகள் மீறல்[illegible]ற்றி சர்வதேச மன்னிப்புசபை[illegible] ஐ. நா. மனித உரிமை ஆணை[illegible]ழு ஆகியன வெளியிட்டுள்ள அறிக்கைகளையும் மற்று[illegible]துதொடர்பாக, [illegible]சசார்[illegible] நிறுவனங்கள் கொண்டு[illegible] கவலையையும் நாம் [illegible]த்திற்கு எடுத்துள்ளோம்.

ஆரம்பத்திலேயே நாம் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அதாவது, வடக்கு கிழக்கில் சில பிரதேசங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன என்பது உண்மையே. ஆயினும், எமது கட்டுப்பாட்டின் அளவும் தன்மையும் வடகிழக்கின் ஏனைய பகுதிகளில் வித்தியாசமாக அமைந்துள்ளது என்பதையும் குறிப்பிட விரும்புகின்றோம்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாடு சில பகுதிகளில் முழுமையானதாக இருக்கவில்லை. சில சமயங்களில், இக் கட்டுப்பாடு, பகலில் இருந்து இரவு வரையும், வேறு சந்தர்ப்பங்களில், நாளுக்கு நாளும் மாற்றமடையும் தன்மையைக்கொண்டது ஒரு விடுதலை இயக்கம் என்ற ரீதியில் எமது முழுக்கட்டுப்பாட்டின் கீழுள்ள பகுதிகளில் சிவில்நிர்வாக அமைப்பை கட்டிஎழுப்பும் வேலைகளில் நாம் ஈடுபட்டுள்ளோம். எனினும்எமது இயக்கத்தின் பிரதேசக் கட்டுப்பாட்டை சிறிலங்கா அரசின் நன்கு ஸ்தாபிக்கப்பட்ட ஆட்சியமைப்புடன்ஒப்பு நோக்க முடியாது.

அடுத்ததாக ஒரு நிதர்சனத்தையும் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டும். எமது மக்களின் நியாயபூர்வமான ஆயுதப்போராட்டமானதுமிக [illegible]


கொலைகளாகவும் சிறிலங்கா இராணுவமானது எமது தாயகத்தை ஆக்கிரமிக்க முயற்சித்து வருகிறது. இந்தக்கொலைகள் இனஒழிப்பு வடிவத்தைப் பெற்றுள்ளன. அதேவேளை, விமானப்படையும் கண்மூடித்தனமான குண்டுவீச்சினையும் நடத்திவருகிறது.

மறுபுறத்தில் இராணுவ ரீதியாக தோற்கடிக்கத் திட்டமிட்டு பொருளாதாரத் தடைகள் அமுல்படுத்தப்படுகின்றன. 'தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் தரும் பொருள்கள்' என்ற பட்டியலில் சோயா உணவுகள், இனிப்பு வகைகள், மற்றும் குளிர்பான வகைகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கு எடுத்துச் செல்வதற்கு அவசர காலச்சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டிருக்கிறது என்பதுடன் இவை தீவிரமாக அமுல் படுத்தப்பட்டும் வருகின்றன. சிறிலங்கா அரசானது தமிழ் மக்கள் தன்னிடம் மண்டியிட வேண்டும் என்ற எண்ணத்தோடு தமிழ் மக்களை பட்டினி நிலைக்கு இட்டுச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

ஆயுதபாணிகளாக்கப்பட்ட சிங்களவர்கள் எல்லைப்புறங்களுக்கு அழைத்துவரப்பட்டு குடியமர்த்தப்பட்டு வருகின்றார்கள். சிங்கள மற்றும் முஸ்லிம் ஊர்காவற்படை என்ற பெயரில் உருவாக்கப்படும் படைகள், சிங்கள இராணுவத்தினால் [illegible]ணுவ படையாகவே செயல்படுகின்றன.

இத்தகைய துணைப்படைகளின் மீதும், ஆக்கிரமிப்புக் குடியேற்றக்காரர்கள் மீதும் விடுதலைப் புலிகள் நடத்தும் தாக்குதல்கள் தவறான முறையில் பொது மக்கள் மீதான தாக்குதல்களாக வர்ணிக்கப்படுகின்றது. சில தமிழ்க் குழுக்களும் சிறிலங்கா அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருவதோடு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலிருந்து தகவல்களைச் சேகரிக்கும் நோக்கத்தோடு உளவாளிகளையும் அனுப்பி வருகின்றனர். இந்த உளவாளிகளை கண்டு பிடித்து தடுத்து வைக்க வேண்டியதும் அவசியம் ஆகின்றது.

எப்படியிருப்பினும் இத்தனை நெருக்கடிகளுக்கும் மத்தியிலும் விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டிலுள்ள பல பகுதிகளிலும் உறுதியான சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், விவசாயம், மீன்பிடி மற்றும் சிறுதொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கான அடித்தள அமைப்புக்களையும் தோற்றுவித்துள்ளனர். கல்வி மற்றும் கலாசார [illegible]



தமிழீழ காவல்துறையின் அணிவகுப்பை தலைவர் பிரபாகரனும், காவல் துறைப் பொறுப்பாளர் நடேசனும் பார்வையிடுகின்றனர்.

நிறுத்த பொருத்தமான அமைப்பு ஒன்று நிறுவப்பட்டுள்ளது. சிறைச்சாலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. சிறைக்காவலர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். சிறையில் இருப்பவர்களை உறவினர்களும், மனித உரிமையாளர்களும், மனித உரிமை நிறுவனப்பிரதிநிதிகளும் சந்திக்க வகை செய்யப்பட்டுள்ளது. கைதிகள் உள்ளூர் மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு அமைய மனிதாபிமான அணுகுமுறையோடு நன்கு பராமரிக்கப்படுகின்றனர்.

கடந்த ஆண்டின் ஜூன் மாதம் முதல் தமிழீழ காவல்துறை செயல்படத் தொடங்கியுள்ளது. தமிழர் தாயகப் பகுதிகளில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நாட்டும் பொறுப்பு தமிழீழ காவல்துறையின் பொறுப்பாளரான திரு. நடேசன் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தமிழீழ காவல்துறையில் ஆண்களும், பெண்களும் சேர்க்கப்பட்டுள்ளனர். தமிழீழ காவல்துறையின் தலைமைப் பணிமனை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளது. சுன்னாகம் உட்பட ஆறு இடங்களில் அதன் கிளை அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன. [illegible]

செய்யப்பட்டு சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. போக்குவரத்துக்களைக் கட்டுப்படுத்துதல் என்பது காவல்துறையின் வழமையானதொரு பணியாக உள்ளது.

சட்டத்தின் ஆட்சியும், நீதி பரிபாலனமும் தமிழர்தாயகத்தில் ஒழுங்கமைக்கப்பட்டு வருகிறது. தண்டனை வழங்கும் விடயத்தில் அடிப்படையான மனு நீதியைப் பேண விடுதலைப் புலிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். நிரந்தர நீதிமன்றுகளையும், சட்ட நிர்வாக அமைப்புக்களையும் நிறுவும் பணிகள் தொடர்ந்தவண்ணம் உள்ளன.

சர்வதேசரீதியான சட்டமுறைகளுக்கேற்ப குற்றம் இழைத்ததற்காக கைதுசெய்யப்படும் ஒருவர் நீதியான விசாரணைக்கு உரிமை உடையவர்.

ஆயுதப் போர்பற்றிய ஜெனிவா மாநாட்டு போர்த் தர்மங்களை ஏற்றுக்கொள்வதாக 1988 இல் விடுதலைப் புலிகள் உறுதியளித்தனர். ஒரு ஆயுதப் போரில் கடைப்பிடிக்கவேண்டிய விதிகளை புலிகள் இயக்கம் பேணி வருகிறது. குறிப்பாக ஆயுதப் போரில் பேணப்படவேண்டிய மனிதாபிமானதர்மங்களையும் எமது இயக்கம் அனுசரித்து வருகிறது. இந்த ஒழுக்க விதிகள் பற்றி நாம் எமது போராளிகளுக்கு விளக்கிவருகிறோம். போரில் இந்தஒழுக்கவிதிகளை [illegible]

பெறும் மாநிலங்களுக்கு என ஆக்கப்பட்ட 'தடா'
சட்டத்தை-பயங்கரவாதம் மற்றும் குற்றச்செயல் தடுப்
புச்சட்டம்-தமிழ் நாட்டிலும் அமுல்படுத்தினார். இச்
சட்டத்தின் கீழ் அரசியல் எதிரிகள், வழக்கறிஞர்கள்
போன்றவர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்
கப்பட்டார்கள். 'தடா' சட்டம் தமிழ் நாட்டில் அமுல்
படுத்தப்பட்ட போது அதற்கெதிரான பல விமர்சனங்
கள் எழுந்தாலும் ஜெயலலிதா அதைக்கண்டு கொள்ள
வில்லை. இச்சட்டத்தின் ஊடாக சில அரசியல் பழி
வாங்கல்களை ஜெயலலிதா தீவிரமாகச்செய்யமுற்பட்ட
போது மத்திய அரசாங்கமே தலையிட்டுத்தடுத்து
வைத்தது.

இதேபோன்று, தமக்கு எதிரான பத்திரிகைகளை
யும் செல்வி ஜெயலலிதா விட்டு வைக்கவில்லை. தனக்கு
எதிராகச் செய்தி வெளியிட்ட நக்கீரன் பத்திரிகையை
தமது கட்சித் தொண்டர்களை வைத்தே தீயிட வைத்
தார், "இது அம்மா நடத்தும் புனிதப் போர். எதிர்த்து
நடப்பவர்களுக்கு நாங்கள் புகட்டும் பாடம்" என்று
வெளிப்படையாகவே அ. தி. மு. க. மாவட்டச் செய
லாளர் ஒருவர் நக்கீரன் பத்திரிகை தீயிட்ட சம்பவம்
பற்றிக் குறிப்பிட்டார்.

இதேபோன்ற பாணியிலேயே எலஸ்டேட்டட் வீக்கிலி,
முரசொலி, மாலைமுரசு பத்திரிகைகள் மீது தமிழக
சட்டசபை நடவடிக்கை எடுக்க முடிவு செய்தது.
செல்வி ஜெயலலிதாவிற்கு எதிராக எழுதியவர்களைப்
பிடி, கூண்டில் நிறுத்து என சட்டசபை தீர்மானம்
நிறைவேற்றியது. உயர்நீதி மன்றம் இதற்குத்தடை
விதித்த போதும், இது சட்டசபையின் சிறப்புரிமை
என தமிழக சட்டசபை சபாநாயகர் சேடப்பட்டி
முத்தையா அறிவித்தார்.

இவ்வாறாக அரசியல் எதிரிகளுக்கும், எதிரான
பத்திரிகைகளுக்கும் எதிராக நடவடிக்கை மேற்
கொண்டு வரும் செல்வி ஜெயலலிதா தமது நடவ
டிக்கைகளைத் தீவிரப்படுத்தவும், சட்டபூர்வமாக்க
வும் விடுதலைப் புலிகள் மீதான தடை உத்தரவை
எதிர்பார்க்கின்றார். விடுதலைப்புலிகள் மீதான
தடை விதிக்கப்படுமானால் விடுதலைப் புலிகளுக்கு
எதிரானவை என்ற போர்வையில் கடும் சட்டங்களை
அமுல்படுத்தும் அதிகாரம் தமிழக முதல்வரின் கைக்கு
கிடைக்கும் இதனை தனது விருப்பத்திற்கு ஏற்ப
செல்வி ஜெயலலிதா பயன்படுத்தலாம். பழிவாங்க
லாம்.

இந்நிலையில் விடுதலைப்புலிகள் மீதான தடை
என்பது ஜெயலலிதாவின் அரசியல் எதிரணியினருக்கு
எதிரான தடையே ஒழிய விடுதலைப்புலிகளுக்கு எதி
ரான தடையல்ல. ஏனெனில் புலிகள் மீது இப்பொழு
தும் தடை உத்தரவு போன்றதொரு நிலையே உள்
ளது. இதனால் பாதிக்கப்படப்போவது தமிழக மக்க
ளும் எதிரணிஅரசியல்வாதிகளுமே ஒழிய புலிகள் அல்ல.
ஆனால் இதன் எதிர்மறை விளைவு தமிழகத்தில் அட
க்குமுறைக்கு எதிராக மக்களை நேரடிப் போராட்டத்
தில் குதிப்பது தவிர்க்கமுடியாமல் போய்விடும்.

மக்களின் நியாயபூர்வமான
ஆயுதப்போராட்டமானதுமிக
வும் நெருக்கடிமிகுந்த சூழலில்
முன்னெடுக்கப்படுகிறது.
பெரும் படையெடுப்புகளாக
வும், திட்டமிட்ட மனிதப்படு

உருவாக்கப்படும் படைகள்,
சிங்கள இராணுவத்தினால்
பயிற்சியும் ஆயுதங்களும்
அளிக்கப்பட்டு சிறிலங்கா
இராணுவத்தின் துணை இரா

யும் தோற்றுவித்துள்ளனர்.
கல்வி மற்றும் கலாசார
செயல்பாடுகளிலும் கவனம்
செலுத்தப்பட்டு வருகின்றது.
சட்டம் ஒழுங்கை நிலை

வலகங்கள் திறக்கப்பட்டுள்
ளன. தனியார் செய்யும்
முறைப்பாடுகள் ஏற்றுக்
கொள்ளப்பட்டு புலனாய்வு

போரில் இந்தஒழுக்கவிதிகளை
மீறுவோருக்கு உரிய தண்ட
னையையும் வழங்கி வரு
கிறோம்.

---

அமெரிக்க - இந்திய

## கூட்டுக்கடற்படை ஒத்திகை மாதஇறுதியில்நடைபெறும்

(டில்லி)

இந்தியாவும் அமெரிக்கா
வும் கூட்டாக மேற்கொள்
ளும் முதலாவது கடற்படை
ஒத்திகை இந்தமாத இறுதி
யில் கொச்சினிலும் கோவா
விலும் இடம் பெறும். இந்தி
யாவின் மேற்குக் கரையோ
ரத்துக்கு அப்பால் 12 மைல்
தொலைவில் இந்த ஒத்திகை
நடைபெறவுள்ளது.

கொச்சினுக்கு வந்து சேரும்
பாரிய அமெரிக்க யுத்தக்கப்
பல்கள் முதற்கட்ட நடவடிக்
கையாக இந்திய அதிகாரிக
ளைச் சந்திக்கும். இரண்டா
வது கட்டமாக இரு தரப்பு
யுத்தக் கப்பல்களும் கோவா
வில் ஒத்திகையில் ஈடுபடும்.
இந்திய-அமெரிக்க கடற்படை
அதிகாரிகள் சமிக்ஞைகளை
செய்து பார்ப்பதுடன், அனு
பவங்களையும் பகிர்ந்துகொள்
வர். தொடர்ந்தாற்போல்
அமெரிக்கக் கப்பல்கள் எரி
பொருள் மற்றும் பொருள்
களை நிரப்பிக்கொண்டு ஒத்
திகையைத் தொடரும் எனத்
தெரிவிக்கப்படுகிறது

இந்தியக் கடற்படை முன்
னர் இதேபோன்ற ஒத்திகை
களை அவுஸ்ரேலியாவுடனும்,
சோவியத் ரஷ்யாவுடனும்
நடத்தியுள்ளது.

## அமெ. தூதரகம் முன் டில்லியில் ஆர்ப்பாட்டம்

(டில்லி)

புதுடில்லியிலுள்ள அமெரிக்
கத் தூதுவரகத்திற்கு முன்
பாக நேற்று பெரும் தொகை
யான மக்கள் ஆர்ப்பாட்டம்
ஒன்றை நடத்தினர்.

ரஷ்யாவிடமிருந்து ராக்
கட் தொழில்நுட்பத்தை இந்
தியா பெறவிருப்பதை ஆட்
சேபித்து பொருளாதார
தடை கொண்டு வரப்பட
லாம் என்று அமெரிக்கா எச்
சரித்து இருப்பதைக் கண்டிக்
கும் முகமாக இந்த ஆர்ப்
பாட்டம் நடைபெற்றது.

இந்தியாவிற்கு ராக்கட்
தொழில் நுட்பத்தை விற்ப
தற்கு ரஷ்யாவுக்கு ஒரு
போதும் அங்கீகாரம் வழங்
கப் படவில்லை எனக் கூறி
யுள்ள அமெரிக்க அரசு, இத்
தொழில்நுட்பம் பரிமாறப்பட்
டால் இந்தியா, மற்றும் ரஷ்
யாவுக்கு எதிராக பொருளா
தாரத் தடை விதிப்பது பற்றி
எச்சரித்திருப்பது தெரிந்ததே.
அமெரிக்க வெளியுறவு அமைச்
சகப் பேச்சாளர் ஒருவர் இது
பற்றிக் கூறுகையில் இந்தியா
மற்றும் ரஷ்யாவிடம்
தொடர்பு கொண்டிருப்பதா
கத் தெரிவித்தார்.

## பாகிஸ்தான் ஸ்டேட் வங்கிக்கு அமெரிக்கா எச்சரிக்கை

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் செக்யூரிட்டி
மற்றும் செலாவணிக் கமிஷன்
பாகிஸ்தான் ஸ்டேட் வங்கி
க்கு எச்சரிக்கை ஒன்றை விடு
த்துள்ளது. கறுப்புப் பணத்தை
வெள்ளைப் பணமாக
மாற்றுவதற்கான அழைப்
பாகத் தோன்றிய ஒரு விளம்
பரத்தை பாகிஸ்தான் ஸ்டேட்
வங்கி வெளியிட்டதை எதிர்
த்தே அமெரிக்கா இந்த எச்
சரிக்கையைப் பிறப்பித்தது.
உள்நாட்டு நிதி வசதி சந்தை
களுக்காக உழைத்து வரும் இக்
கமிசன் அமெரிக்க செக்யூரிட்
டிகள் சட்டத்தை மீறியமைக்
காக வெளிநாட்டு அரசு ஒன்
றின் ஸ்டேட் வங்கி மீது குற்
றம் சாட்டியிருப்பது இதுவே
முதன் முறையாகும் என்பது
குறிப்பிடத்தக்கது

பாகிஸ்தான் நாட்டினால்
உத்தரவாதம் அளிக்கப்பட்ட
'பாண்ட்' பத்திரங்களின் பெரு
க்கத்திற்கே இது வகை செய்
யும் விதத்தில் அமெரிக்க
செய்தி ஏடுகளில் வெளியான
இவ் விளம்பரத்தில் "பணம்
எங்கிருந்து கிடைத்தது என்
பது பற்றி எதுவும் கேட்கப்
படாது" எனக் கூறப்பட்டிருப்
பதுடன் பணம் தருபவர் இன்
னார் என்றும் பெயர் குறிப்
பிடப்படமாட்டாது என்றும்
குறிப்பிடப்பட்டுள்ளது.

## 100 பேர் பலி

(லண்டன்)

மேற்கு ஆபிரிக்க நாடொன்
றான சியாரா ராளில் வைரச்
சுரங்கம் இடிந்து விழுந்து
புதையுண்டதில் நூறு பேர்
வரை உயிர் இழந்துள்ளனர்
என பி. பி. ஸி, தெரிவித்துள்
ளது.

## விசச் சாராய மரணம் 175ஆக உயர்வு

(டில்லி)

ஒரிசாவில் விசச் சாராயம்
அருந்தியதால் மரணமடைந்த
வர்களின் எண்ணிக்கை நூற்
றிஏழுபத்தைந்து வரை உய
ர்ந்து விட்டது.

புவனேஸ்வர் மருத்துவ
மனையிலும், கட்டார் மாவட்
டத்தின் பல்வேறு மருத்துவ
மனைகளிலும் விசச்சாராயம்
குடித்த இன்னும் பலர் உயி
ருக்குப் போராடிக் கொண்டி
ருப்பதாகத் தெரியவருகிறது.

## ஜெயலலிதாவை வரவேற்க விளம்பர செலவு 50 லட்சம்

(சென்னை)

நீண்டகாலமாக மூடப்பட்
டிருந்த பிரன்ட்சி மில்லின்
திறப்பு விழாவிற்காக முதல்
வர் ஜெயலலிதா வருகை
தந்தபோது வரவேற்பு விளம்
பரங்களுக்காக மட்டும் ஐம்
பது லட்சம் ரூபா செலவு
செய்யப்பட்டதாக தெரியவரு
கின்றது.

தினத்தந்தி அலுவலகத்தி
லிருந்து மில் இருக்கும் இடம்
வரையிலான பகுதியில் மட்
டும் இருபத்தாறு கட்அவுட்டு
கள் அமைக்கப்பட்டிருந்தன.
அவற்றில் சுமார் 75 அடி உயர
மான கட்அவுட்டும் இடம்
பெற்றிருந்தது. மேலும் வழி
நெடுகிலும் தோரணம் வண்ண
வண்ண சுவரொட்டிகள் வேறு.
அத்துடன் செல்வி ஜெய
லலிதா செல்லும் திறப்பு
விழா நிகழ்ச்சிக்காக சுற்றுப்
புறச் சூழலில் பாதுகாப்பிற்
காக கடைகளும் மூடப்பட்
டன.

இதனிடையே மதுரையில்
நடைபெறவிருந்த எம் ஜி ஆர்
சிலை திறப்பு விழா ஒன்று
இறுதி நேரத்தில் கைவிடப்
பட்டுள்ளது ஏன் இந்த வேண்
டாத வேலை என்று முக்கிய
பிரமுகர்கள் சிலர் கேள்வி
எழுப்பியதை அடுத்து எம்.ஜி
ஆர் சிலை சாக்கில் கட்டப்
பட்டு மூலையில் போடப்பட்
டதாகவும் தெரிய வருகிறது.

அரசின் செலவினங்களைக்
குறைப்பதற்காக முதல்வர்
ஜெயலலிதா ரூபா ஒன்று மட்
டுமே சம்பளமாகப் பெற்று
வருவது இங்கு குறிப்பிடத்
தக்கது.

ஈழநாதம்

## வடககு - கிழக்கு மாகாண நிலைமையை ஆராய கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடகிழக்குக்குமாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக ஆராய்வதற்கான விசேட கூட்டம் ஒன்று இம் மாத இறுதியில் கொழும்பில் நடைபெற இருக்கிறது.

இக் கூட்டத்தில்வடக்கு கிழக்குமாகாணத்தில்உள்ள அனைத்து மாவட்டங்களினதும் அரசாங்க அதிபர்கள் மற்றும் திணைக்களங்களைச் சார்ந்த உயர் அதிகாரிகள் கலந்து கொள்வர் மேற்படி மாகாணத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனர்வாழ்வு வேலைத் திட்டங்கள் பற்றியும் ஏனைய நிர்வாக நடைமுறைகள் பற்றியும் இக் கூட்டத்தில் ஆராயப்பட இருக்கிறது

இதற்காக யாழ் அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இம்மாத இறுதியில் கொழும்பு புறப்பட இருக்கிறார் (க)

## அப்பாவிகளின் வரிப்பணம் ஆடம்பரத்துக்கு செலவீடு

இந்த நாட்டு அப்பாவி மக்களிடம் இருந்து அறவிடப்படும் மொத்த விற்பனை வரி ஒருசிலரின் ஆடம்பர வாழ்வுக்கே செலவிடப் படுகிறது. அமைச்சர்கள் அதிகாரிகள் பாவிக்கும்வாகனம் அரசஅலுவலகங்களின்வசதிகள் ஆகியவற்றை பார்க்கும் போது சாதாரண மக்களின் நிதி எப்படி விரயமாகிறது என்பதனை உணரலாம்

இவ்வாறு பாராளுமன்றத்தில மொத்தவிற்பனை வரி சட்ட மூல விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்

அவர் தொடர்ந்து பேசுகையில் வரிச்சலுகைகள் முதலாளிமார்களுக்கே வழங்கப்படுகின்றன. எனினும் இந்த சலுகைகளால் நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தி அடைந்ததாக தெரியவில்லை அத்துடன் கூட்டுறவுச் சங்கங்களிடம் மொத்த விற்பனை வரி அறவிடப்படுகிறது ஆனால் வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் அவற்றுடன் சோடி சேர்ந்த நிறுவனங்களுக்கும் சலுகைகள் அளிக்கப் படுகின்றன

ஐ தே. க.மே தினத்துக்கு பலவந்தமாக ஆட்கள் கொண்டுவரப்பட்டார்கள் டிரைஸ்ரார் நிறுவன ஊழியர்களை காலிமுக திடலுக்கு கட்டாயப்படுத்தி கொண்டு வந்தார்கள்.மேலும் காலிமுகத் திடலில் தலைகளை அதிகரிப்பதற்கு அரசாங்கத்திடம் சலுகை பெறும் தனியார் நிறுவனங்கள் உதவியளித்துள்ளன எனவும் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்கள்

### அருணாசலம் தியாகராசா
(முன்னாள் முகாமையாளர், வாக்கஸ் யாழ்ப்பாணம்)

தென்புலோலி புற்றளையைச் சேர்ந்த அருணாசலம் தியாகராசா 05-05-1992 அன்று செவ்வாய்க் கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் தங்கம்மா தம்பதிகளின் மூத்த புதல்வரும்,பாக்கியத்தின்அன்புக் கணவரும், கமலேஸ்வரி. கணேசராசா (பப்புவாநியூகினி),பரமேஸ்வரி (கொழும்பு மாநரசபை), ஈஸ்வரி, நடராசசுந்தரம் (ஜேர்மனி), தியாகேஸ்வரி (ஆசிரிய பயிற்சிக் கலாசாலை கோப்பாய்), மகேந்திர ராசா (சுவிற்சர்லந்து) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கதிரேசு, விமலநாதன் (கொழும்பு மாநகர சபை), சிவலோகநாதன், மஞ்சுளா (பப்புவாநியூகினி)

## இன்றைய உதைபந்தாட்ட போட்டி

யாழ்மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் பதினொரு பேர் கொண்ட உதை பந்தாட்ட சுற்றுப் போட்டியில் முதற் சுற்றில் தெரிவு செய்யப்பட்ட ஆறு கழகங்களுக்கிடையிலான லீக் முறையிலான இரண்டாவது சுற்றுப் போட் போட்டியில் இன்று பாசையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டு கழகம் அளவெட்டி விநாயகர்விளையாட்டுக் கழகத்தைஎதிர்த்து மோதவுள்ளது யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 3 30 மணிக்கு இப் போட்டி நடைபெறவுள்ளது.

## ஜே.ஓ.சி. குண்டுவெடிப்பு
## நடராசாவிற்கு எதிராய் குற்றப்பத்திரிகை

(கொழும்பு)

ஜே.ஓ.சி குண்டு வெடிப்பு தொடர்பாக கடந்த 25-6-91 இல் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வெள்ளவத்தையைச் சேர்ந்த இராசையா நடராசவுக்கு எதிராக இன்னும் இரு கிழமையில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் அல்லது அவரது விடுதலை குறித்து பரிசீலனை செய்யப்படும்.

இவ்வாறு அரச சட்டத்தரணி விஜித மலலகொட கடந்த புதன்கிழமை குழந்தைவேலு நித்தியேஸ்வரன் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது தெரிவித்தார்.

பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மேலும் கூறியதாவது இன்ஸ்பெக்டர் பி.ஜி.ஜி. தேவசுரேந்திராவின்சதியொக்கடதாசியின் படி சார்த்தரகரான நடராஜா குண்டை வைப்பதற்கு வாகனம் ஒன்றை வரதனுக்கு பெற்றுக்கொடுப்பதில் தீவிரமாகச் செயற்பட்டுள்ளாரெனவேஇன்னும் இரு வாரங்களில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும்இல்லையேல் அவரை விடுதலை செய்வது குறித்து பரிசீலிக்கப் படும் எனவும் தெரிவித்தார்.

இதையடுத்து நீதியரசர் வழக்கை இம்மாதம் 21-ம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்

## அரச உத்தியோகத்தால் அதிக வருமானம்கிடையாது

அரசாங்க உத்தியோகத்தின் மூலம் கூடுதலான வருமானத்தை ஈட்ட முடியாது நீங்கள் வாவி மீன் பிடித்தலுடன் மட்டும் நின்று தொழில புரியாமல் ஆழ்கடல் தொழிலி... ளது என மட்டக்களப்பு மாவட்ட அரசஅதிபர் ஆர். மோனகுருசமி தெரிவித்தார்.

நொச்சிமுனை மீனவர் கூட்டுறவுச்சங்கத்தைச் சேர்ந்த சுமார் 43மீனவர்களுக்குதலா

## செஞ்சிலுவை தினம் அனுட்டிப்பு

(யாழ்ப்பாணம்)

செஞ்சிலுவைச்சங்க தினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது இத்தினத்தை யொட்டி இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் யாழ் கிளை நேற்று முன்தினம்இரத்ததான நிகழ்ச்சிஒன்றை ஒழுங்கு செய்தது.சுமார் ஒன்பது பேர்யாழ். போதனா மருத்துவ மனையில் இரத்த தானம் செய்தனர். அணிவகுப்பு வைபவம் ஒன்றும், தெருக்கூத்து நிகழ்ச்சி ஒன்றும் மேற்படி வைத்தியசாலை முன்றலில் நடைபெற்றது.

## யூ.கோ. இராணுவ அதிகாரிகளில்
## நாற்பது பேர் பதவி நீக்கம்
## அரசு-ராணுவ இழுபறிமுடிவு

(பெல்கிரேட்)

யூகோஸ்லாவிய முப்படைகளில் பெரியளவில் பதவிநீக்க நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் நாற்பது உயர்நிலை இராணுவ மற்றும் கடற்படை அதிகாரிகள் பெடரல் இராணுவத் தலைமையகத்தினால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

ஸ்லவேனியா மற்றும் குரோஷியா பகுதிகளில் செர்பியர்கள் முன்னணியின் இராணுவத்தை வழிநடத்திச் சென்ற தளபதி மற்றும் செர்பியப் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரும் இவர்களில் அடங்குவர்

இந்தப்பதவி நீக்கங்கள்செய்யப்பட்டமைக்கான காரணங்கள் அறிவிக்கப்படாத போதிலும், யூகோஸ்லாவியாவில் இராணுவ மற்றும் அரசியல் தலைமைகளுக்கிடையே இருந்த பெரியதொரு அதிகாரப் போட்டியை இம்மாற்றங்கள் முடிவுக்குக் கொண்டுவந்திருப்பதாக அவதானிகள் கருதுகின்றனர்.

## சுகாதார அமைச்சரின் பேச்சு; உலக நாடுகளுக்கு அதிர்ச்சி

(ஜெனிவா)

வடக்கு கிழக்கில் ஏற்பட்டுள்ள சிவில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அடிப்படை சுகாதார வசதிகள் எந்தளவிற்கு வழங்கப்பட்டது என்பது குறித்து சிறிலங்கா அரசின் சார்பில் கலந்து கொண்ட சுகாதார அமைச்சர் திருமதி றேனுகா கேரத் வெளியிடாமை அங்கு கலந்து கொண்ட அங்கத்துவ நாடுகளுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக லண்டன் பி.பி.சியின் சுவிற்சலாந்து செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் 45வது மகாநாடு கடந்த புதன்கிழமை சுவிற்சலாந்தில் நடைபெற்றது. இம் மாநாட்டிற்கு ஐ.நா. சபையில் அங்கம் வகிக்கும் அனைத்துலக நாட்டுப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

நோய் சுகாதாரம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ள தமது மக்களுக்கு அந்தந்த நாட்டு அரசுகள் என்னென்ன சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தன என்பதை அறியும் பொருட்டே இம் மாநாடு கூட்டப்படுவது வழக்கம். ஆனால் இம்மாநாட்டில் கலந்து கொண்ட சிறிலங்கா சுகாதார அமைச்சர் தாம் மருத்துவத்துறையில் பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளதாகவும் வெளிநாடுகளின் உதவியுடன் இனிமேல் தாம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ள நடவடிக்கைகள் பற்றியுமே விபரித்தாரே தவிர வடக்கு கிழக்கில் என்னென்ன சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுதோம் எனக் கூறாததே இவ் அதிர்ச்சிக்குக் காரணமாகும்.

## பொலிஸாரின் தாமதமே கலகம் பரவக் காரணம்

சென்றவாரம் லொஸ் ஏஞ்சல்ஸில் இடம்பெற்ற கலகத்தை தடுப்பதில் தாமதம் காட்டியதனால் அது பெரிதாக வளர்ந்தது என நகர பொலிஸ் அதிபர் மீது புகார்கள் கூறப்பட்டு வருகின்றன.

அதே சமயம் நூற்றுக்கணக்கானோர் கொள்ளையடித்த பொருள்களை மீண்டும் ஒப்படைக்க ஆரம்பித்துள்ளனர்.

கொள்ளையடிக்கப்பட்ட ஆடம்பரமான சோபாக்கள், விலை உயர்ந்த டெலிவிஷன் செட்டுகள் ஆகியவை மீண்டும் வீதிகளுக்கு வந்துள்ளன.

திரும்ப ஒப்படைக்கப்பட்டால் மன்னிப்பு அளிக்கப் படும் என்றபொலிஸாரின்அறிவிப்பை அடுத்து அவை ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.

பொலிஸார் தாமதமாக செயல்பட்டது சம்பந்தமாக விசாரணை நடாத்த பொலிஸ் கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் தலைவர் கேட்ஸ் ரொஜினாமாச்செய்ய வேண்டும் என சிவில் உரிமைக் குழுக்களும் உள்ளூர் அரசியல் வாதிகளும் வலியுறுத்தி வருகின்றனர்.

## குவைத்தில் எசமானர் கொடுமை; 130 பணிப்பெண்கள் திரும்பினர்

குவைத்திலிருந்து கடந்த பத்து நாட்களில் 130 பணிப் பெண்கள் இலங்கைக்குத் திரும்பி வந்திருப்பதாகக்கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட இந்த 130 பேரில் 12 பேர் கர்ப்பம் தரித்திருக்கின்றார்கள் 25 பேர் நோயாளிகள் எல்லாருமே பொதுவாகத் தாங்கள் பணிபுரிந்த வீடுகளில் துன்புறுத்தப் பட்டதாகத் தெரியப் படுத்தினார்கள் ஓய்வொளிச்சல் இல்லாத வேலை. அடி உதை, கற்பழிப்பு, சித்திரவதை- இவையெல்லாம் பெருமளவில் இடம் பெறுவதாக தெரிய வருகிறது.

இக்கொடுமைகள் பற்றிய தகவல்களை அனைத்துலக செய்தி நிறுவனங்கள் வெளியிட்டதும் தப்பியோடிய பணிப் பெண்களைத் திருப்பி அனுப்பும் பொறுப்பையும் செலவையும் குவைத் அதிகாரிகள் கடந்த மாதம் ஏற்றுக் கொண்டார்கள் இதன் பின்னர் நாளுக்குப் பத்துப் பணிப்பெண்களையாவது குவைத்திலுள்ள சிறிலங்காத் தூதரகம் கொழும்புக்குத் திருப்பி அனுப்பிய வண்ணம் இருக்கிறது.

குவைத் நாட்டிலுள்ள பங்களாதேஷ், இந்தியா, பிலிப்பைன்ஸ் பணிப்பெண்களும் இதே போல் துன்புறுத்தப் படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. குவைத்திலுள்ள அந்தந்த நாட்டுத் தூதுவராலயங்களில் இப் பணிப்பெண்கள் கூடி தம்மை திருப்பி அனுப்புமாறு கோரிய வண்ணம் உள்ளனர்.

## பஞ்சாப்பில் குண்டுவெடிப்பு 7 பேர் பலி; 55 பேர் காயம்

பஞ்சாப்பில் அமிர்தசரஸ் நகரத்தில் நேற்றுக் காலை சக்திவாய்ந்த குண்டொன்று வெடித்ததில் பஞ்சாப் மாநிலத்தில் பொதுச் சுகாதாரத் துறை இணை அமைச்சர் மநிந்த ஜிதசிங் குல்தா நூலிழையில் உயிர்தப்பினார்.

இரண்டுபொலிசார் உட்பட ஏழுபேர் இந்தச் சம்பவத்தில் இறந்து போனார்கள் ஆறு பாதுகாப்புப் படை வீரர்கள் உட்பட 55 பேர் காயமுற்றனர்.

சனநெரிசலான வைறட் மார்க்கட்டில் மருத்துவமனை

ரும், சுதரேசு, விமலநாதன் (...ழும்பு மாநகர சபை). சிவலோகநாதன், மஞ்சுளா (பப்புவா நியூகினி) ஆகியோரின் மாமனாரும், செழியன் மாதவி, விமலாதித்தன், சுபாங்கி ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற திருமதி சிவக்கொழுந்து, பொன்னையா, கதிரவேலு, இலட்சுமிப்பிள்ளை, இராசரத்தினம், தனபாலசிங்கம், சந்திரசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திரசேகரம், இலட்சுமிப்பிள்ளை, வள்ளிப்பிள்ளை, ஆகியோரின் மைத்துனருமாவார். இறுதிச் சடங்குகள் 06-05-1992 இல் நடைபெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

புற்றளை, மனைவி, பிள்ளைகள்
புலோலி. (2558)

## அம்பலவாணர் சிவசுப்பிரமணியம்

(ஒய்வுபெற்ற சிறாப்பர்)

திருநெல்வேலி கலாசாலை வீதியைப் பிறப்பிடமாகவும், சிவப்பிரகாசம் வீதி வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் சிவசுப்பிரமணியம் காலமானார். இவர் காலஞ்சென்ற பிரபல ஆயுர்வேத வைத்தியர் அம்பலவாணர் தப்பதியின் புதல்வனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவசாந்தி (நோர்வே), சிவறஞ்சன் (நோர்வே), சிவச்சந்திரன் (நோர்வே), சிவயேந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், சச்சிதானந்தம் (நோர்வே), சத்தியரூபி (நோர்வே), தெய்வேந்திரம் ஆகியோரின் மாமனும், றமேஸ், நித்தியா, மயூரன், ஆரபி, றஞ்சினி நிந்துஜா, ஆதவன், நிசாருணி ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 10-5-1992 ஞாயிறு (இன்று) பிற்பகல் 3 மணியளவில் கோப்பையமணல் மயானத்திற்குத் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
திருமதி மகேஸ்வரி சிவசுப்பிரமணியம்
42, சிவப்பிரகாசம் வீதி, (மனைவி)
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (2562)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1992ஆம் ஆண்டு மே மாதம் 10ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

யாமல் ஆழ்கடல் தொழிலிலும் ஈடுபட வேண்டும். வட-கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு 600 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் மீனவர்களுக்கு மானியமாக 25 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்

சுமார் 43மீனவர்களுக்குதலா 750 ரூபா பெறுமதியானவலைகளும் 250 ரூபா கொண்ட சேமிப்புப் புத்தகங்களும் வழங்கும் வைபவத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# போர்க்காலச் சூழலினால் குறைப்பிரசவம் அதிகரிப்பு

போர்க்கால சூழ்நிலையில் ஏற்படும் அதிர்ச்சி போன்ற சம்பவங்களால் யாழ். போதனா வைத்தியசாலையில் குறைப் பிரசவங்கள் சம்பவிக்கின்றன என்று போதனா வைத்தியசாலை மத்திய மருந்துக் களஞ்சியத்தில் நடைபெற்ற ''போசாக்கின்மையும் அவற்றைத் தவிர்க்கும் வழிமுறைகள்'' என்ற கருத்தரங்கில் வைத்தியகலாநிதி திருமதி என். சுந்தரலிங்கம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:

போஷாக்கு இன்மையாலும் அனேக குழந்தைகள் நிறை குறைவாகப் பிறக்கின்றன கர்ப்பவதிகள் கர்ப்பமுற்றிருக்கும் காலத்தில் மட்டும் போஷாக்கு உணவை எடுக்கின்றனர். இது ஆரோக்கியமான குழந்தை பிறப்பதற்கு போதாது. பொருளாதாரக் குறைவால் போஷாக்கான உணவு இவருக்கு கிடைக்காமல் போகிறது.

இன்று யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை வீட்டில் உள்ள ஆண் பிள்ளைகளுக்கு கூடுதல் உணவு கொடுப்பதும் பெண் பிள்ளைகளுக்கு குறைந்த உணவு கொடுக்கும் பழக்கத்தினாலும் இந்த நிலை ஏற்படுகிறது

---

**உயர்**

வைச் செயலாளரோ ஏற்றுக் கொண்டு பதிலளிக்கப் போவதில்லை என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதே சமயம் சட்டப் பேரவையில் ஏற்கனவே கடைப்பிடிக்கப்பட்ட மரபுகளில் அடிப்படையிலும் அரசியல் சட்ட மரபுகள், நடைமுறைகள் படியும் அரசியல் சட்டத்துறை அலுவலர்கள் மூலம் உச்ச நீதி மன்றத்துக்கு தக்க தகவல்கள் தெரியப்படுத்தப்படும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

---

**கடலுக்கு**

திரும்பி வரா தவராவர்.

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் மண்டைதீவு மண்கும்பான் காவலரண்களில் இருந்து சிறிலங்கா இராணுவம் கலிபர் துப்பாக்கித் தாக்குதல்களை நடத்தியது அறிந்ததே. (21)

---

**ஜோர்ஜ்**

கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பொதுமக்களின் நலனை முன்னிட்டா இல்லையா என்பதை நீதிமன்றத்தின் முடிவுக்கே விடுவது நல்லது என்று கருத்துத் தெரிவித்தார்.

---

**கண்ணிவெடியில்**

வண்டி ஒன்றின் மீது மல்லிசைத் தீவுச் சந்திக்கும் பட்டித்திடலுக்கும் இடையில்வைத்து விடுதலைப் புலிகள் கண்ணி வெடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர். இதில் சிக்கிய ஜீப் வண்டி முற்றாகச் சேதமடைந்தது. இத்தாக்குதலின் போது இராணுவ தரப்பினருக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் இதுவரை தெரியவில்லை.

மார்க்கட்டில் மருத்துவமனை ஒன்றின் அருகே வீதியில் அமைச்சரின் கார் சென்ற போது, அங்கு நிறுத்தப்பட்டிருந்த காரில் வைக்கப்பட்டிருந்த தொலைவில் இருந்து இயக்க வைக்கும் வெடிகுண்டு வெடித்தது அமைச்சருக்கு இலேசான காயங்கள் ஏற்பட்டன.

---

**புலிகளைத்**

மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக மக்களிடமிருந்து ஆதரவையும், அநுதாபத்தையும் அவர்கள் முற்றும் இழந்து விட்டனர் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை தமிழ் நாட்டில் ஒருமைப்பாட்டிற்கு மட்டுமன்றி இந்திய நாட்டின் சுதந்திரத்திற்கே ஊறு விளைவிக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்ய வேண்டும் என்று தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி எஸ் டி. எஸ் பிரிவு வலியுறுத்தியுள்ளது

நேற்று சென்னையில் நடந்த அதன் மாநிலக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் இயற்றப்பட்டது

---

**குண்டுத்**

போது பொலிசார் வீட்டிற்குள் நுழைய முற்பட்டனர். இதன்போது மற்றொரு குண்டை அவர் வீசியதைத் தொடர்ந்து இராணுவத்தின் உதவியைப் பொலிசார் நாடினர்.

இதன் போது மூன்று கவச வாகனங்களுடன் அவ் வீட்டை சுற்றிவளைத்த நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் மீது இறுதியாக இருந்த குண்டையும் வீசிவிட்டு சயனைட் அருந்தி லெப்டினன்ட் பிரபாகரன் (தம்பிப்பிள்ளை பிரபாகரன் வயது 20 சத்துருக்கொண்டான் - மட்டக்களப்பு) வீரச்சாவடைந்தார்

வீரச்சாவடைந்த இவ் வேங்கைக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

---

**கொக்குத் தொடுவாய்**

இனப்பாகுபாடின்றித் தாம் குடியேற்றங்களை நிறுவுவதாகக் கூறியே சிறிலங்கா அரசு இக்குடியேற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

கொக்கிளாயில் இருந்து கொக்குத்தொடுவாயை நோக்கிய கரையோரப் பகுதிகளில் நூற்றிஇருபத்தெட்டு சிங்கள மீனவக் குடும்பங்கள் அகதிகளுடன் கூடிய புதிய கிராமத்தில் குடியமர்த்தப்பட்டனர். இதேவேளை மணலாறின் உட்பகுதியில் விவசாயம் என்ற போர்வையில் பலர் குடியேற்றப்படுகின்றனர்.

மணலாறு தமிழரின் பாரம்பரியப்பிரதேசம். தமிழீழத்தை இரண்டாகப் பிரித்து மலையகத்தைத் தன்கைக்குள் கொண்டுவருவதற்காகச் சிங்களக் குடியேற்றங்களை அபிவிருத்தி என்ற போர்வையில் அமைத்து வருகிறது.

1956 இல் ஆரம்பமான இவ் ஆக்கிரமிப்பு 1980 களில் தீவிரமானது தமிழ்க்கிராமங்களில் இருந்த தமிழர்கள் இராணுவத்தால் விரட்டியடிக்கப்பட்டு அங்கு சிங்களவர் குடியமர்த்தப்படுவது தெரிந்ததே.

திருப்பி அனுப்புமாறு கோரிய வண்ணம் உள்ளனர்.

---

**மோசமான உணவு நிலை**

தமிழ் நாட்டிலிருந்து வந்த அகதிகளில் பலர் வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் அவர்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருள்கள் பாவனைக்கு உதவாதவை என தெரியவருகிறது.

---

**பத்திரிகை**

தொழிற்சங்கத்தைச் சேர்ந்த க. சுப்பு ''இங்கே ஒரு ஹிட்லர்'' என்ற தலைப்பில் தொடர் கட்டுரை எழுதிவருவதும், இந்தக் கட்டுரையைப் பற்றி மறைமுகமாகக் குறிப்பிட்டு ஜெயலலிதா சட்டமன்றத்தில் பேசியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

---

**தூதரகம்**

லயத்திற்கு அடுத்தபடியாக கொழும்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களுக்கு முன்னால் கியூ நிற்கிறது. இப்படிக் கியூவில் நிற்பவர்களில்பெரும்பாலானோர் இளம் பெண்கள். கிராமங்களிலிருந்து வெளிநாட்டு வேலை வாய்ப்புத் தேடி வருபவர்கள்.


## ஸ்ரீதர் திரையரங்கில்

**தினசரி மாலை 4.00 மணிக்கு**

சனி, ஞாயிறு தினங்களில்

**மாலை 400, 600 மணி**

காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றது.

# Freedom Forces

(இந்தோனேசிய விடுதலைப் படை)

(சி/4347)